**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**
முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2025 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ஆம் நாள் திங்கட்கிழமை
**இ.ம.எண்.01/2024 இன் அ.வ.எண்.117/2024**

1. ரங்கநாயகி
2. சிவக்குமார்
3. நாகேஸ்வரி
4. சாந்தி .... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர் /

சரஸ்வதி .... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது கடந்த 12.03.2025 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.மனோகர் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திருமதி.R.வளர்மதி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளை கேட்டும், இதுநாள் வரை எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட...

## ஆணையுரை

மனு சொத்துக்களில் மனுதாரர்கள் கொண்டுள்ள சுவாதீனத்திற்கு எதிர்மனுதாரரோ, அவரது ஆட்கள் வகையறாக்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என இவ்வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக் கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39, விதி 1 மற்றும் 2–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனு சங்கதியின் சுருக்கம் :**

இம்மனுவின் 1–ம் மனுதாரர் அசல் வழக்கில் 1–ம் வாதி ஆவார். 2 முதல் 4 மனுதாரர்கள் 1–ம் மனுதாரரின் மகன் மற்றும் மகள்கள் ஆவர். 1–ம் மனுதாரரின் கணவரான, காலம் சென்ற முத்துச்சாமியும், எதிர்மனுதாரரின் கணவரான காலம்

சென்ற தங்கவேல் (எ) ராமலிங்கம் ஆகிய இருவரும் சகோதரர்கள் ஆவர். வழக்கு சொத்தும், இதர சொத்துக்களும் 02.02.1979 தேதியிட்ட கிரயப்பத்திரப்படி 1–ம் மனுதாரரின் மாமனார் காலம் சென்ற மாரியப்பபிள்ளைக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். அந்த சொத்துக்களை பொறுத்து மாரியப்பபிள்ளை கடந்த 31.07.2000 அன்று ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் எழுதிவைத்துள்ளார்.

**2.2)** உயில் எழுதிய தேதிக்கு முன்பே எதிர்மனுதாரரின் கணவர் ராமலிங்கம் இறந்துவிட்டார். பிறகு 1–ம் மனுதாரரின் கணவரும் கடந்த 13.10.2013 அன்று வாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். மாரியப்பபிள்ளை கடந்த 17.06.2001 அன்று காலமாகிவிட்டார். கடந்த 19.11.2023 அன்று மாரியப்பபிள்ளையின் மனைவியும், 1–ம் மனுதாரரின் மாமியாருமான அலமேலம்மாள் காலமாகிவிட்டார். மாரியப்பபிள்ளை இறந்ததும், உயில் நடைமுறைக்கு வந்து, வழக்கு சொத்துக்கள் மாரியப்பபிள்ளை மனைவி அலமேலம்மாள் சுவாதீனத்தில் இருந்து, அவரது காலத்திற்கு பின் வாதிகள் அனுபவித்து வருகிறார்கள். உயிலில் கண்ட ஏ அட்டவணை சொத்துக்களை 1–ம் மனுதாரரின் கணவரும், பி அட்டவணை சொத்தை காலம் சென்ற ஆறுமுகத்தின் மனைவி ஜோதி என்பவரும் அடைந்து, அவர் காலத்திற்கு பிறகு ஜோதியின் சகோதரர் மற்றும் வாரிசுகளுக்கு பாத்தியப்பட்டது என எழுதியுள்ளார். சி அட்டவணை சொத்து மாரியப்பபிள்ளையின் மகள் பாக்கியம் என்பவருக்கு பாத்தியம் என உயில் எழுதப்பட்டுள்ளது.

**2.3)** வழக்கு சொத்தான ஏ அட்டவணை சொத்து 1–ம் மனுதாரரின் கணவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தாகும். 1–ம் மனுதாரரின் கணவர் இறந்துவிட்டபடியால், ஏ அட்டவணை சொத்துக்கு வாதிகள்தான் உரிமையாளர்கள். உயில் ஏ அட்டவணை சொத்து 2 பாகங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. அதில் முதல் பாக சொத்தில் 1–ம் மனுதாரரின் கணவர் முத்துச்சாமிக்கு முழு உரிமை கொடுத்தும், 2–வது பாக சொத்தை நிபந்தனை

பாத்தியமாக உயில் எழுதிவைத்துள்ளார். மேற்படி நிபந்தனையானது மாரியப்பபிள்ளை மற்றும் அவரது மனைவி அலமேலம்மாள் இறந்த பிறகு இரண்டு வருட கெடுவிற்குள் மனுதாரர்கள், எதிர்மனுதாரரின் கணவரின் வாரிசுகளான மனைவி சரஸ்வதி மற்றும் நான்கு பெண்மக்களுக்கு தலா ரூ.40,000/–ஐ (மொத்தம் ரூ.2,00,000/–) செலுத்தவேண்டும் என்றும், தவறும் பட்சம் 2–வது பாக சொத்துக்களை எதிர்மனுதாரர் மற்றும் அவரது பெண் மக்கள் வசம் மனுதாரர்கள் ஒப்படைக்கும்படியும் உயில் எழுதப்பட்டுள்ளது. மாரியப்பபிள்ளை இறந்தபிறகு அலமேலம்மாள் மனுதாரர்களது அரவணைப்பில் வாழ்ந்து வந்ததால் வழக்கு சொத்துக்களை மனுதாரர்கள் ஆண்டு அனுபவித்து வந்தனர். அலமேலம்மாள் இறந்தபின் மனுதாரர்கள் சொத்தை தனி சுவாதீனம் எடுத்து மனுதாரர்கள் தற்போது வரை இடையூறுகளின்றி அனுபவித்துவருகிறார்கள்.

**2.4)** அலமேலம்மாள் இறந்த பிறகு உயில் சரத்துப்படி மனுதாரர்கள், எதிர்மனுதாரர் மற்றும் அவரது பெண் வாரிசுகளிடம் தொகையை பெற்றுக்கொண்டு ரசீது எழுதி தருமாறு பலமுறை விருப்பம் தெரிவித்தும், தொகையை பெறாமல், தற்போது வழக்கு சொத்தில் தனக்கு பாகம் உள்ளது என எதிர்மனுதாரர் கூறி மனுதாரர்களின் சுவாதீனத்திற்கு இடையூறு செய்து வருகிறார். வழக்கு சொத்தில் யாரும் இல்லாதபோது ரூ.20,000/– மதிப்புள்ள தேங்காய்களை எதிர்மனுதாரர் எடுத்துச்சென்றுவிட்டார். வழக்கு சொத்தில் உள்ள களத்துச்சாளையையும் ஆக்கிரமிப்பு செய்ய முயன்றுவருகிறார். கடந்த 31.05.2024 அன்று வழக்கு சொத்தில் எதிர்மனுதாரர் அத்துமீறி நுழைந்து சொத்தில் தனக்கு பாகம் உள்ளது என்றும், எனவே சுவாதீனம் கொடுக்க வேண்டும் என்றும், தவறும் பட்சம் தற்கொலை செய்துகொள்வதாக மிரட்டினார். மனுதாரர் அங்கிருந்த வேறு நபர்கள் மூலம் எதிர்மனுதாரரின் சட்டவிரோத செயல்களை தடுத்து, கோட்டூர் காவல் நிலையத்தில புகார் கொடுத்தார். காவல் துறையினர் எதிர்மனுதாரரை விசாரித்து சட்டத்திற்கு புறம்பாக எதையும்

செய்யக்கூடாது என அறிவுறுத்தி அனுப்பிவைத்தனர்.

**2.5)** மனுதாரர்கள், எதிர்மனுதாரர் மற்றும் அவரது பெண் மக்களுக்கு உயில்படி தலா ரூ.40,000/-ஐ செலுத்த தயாராக உள்ள நிலையில் எதிர்மனுதாரர் ஆக்கிரமிப்பு செய்ய முயல்வதால், மனுதாரர்களால் நிம்மதியாக விவசாயம் செய்ய முடியவில்லை. எனவே, மனுதாரர்கள்/வாதிகளால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3)** **<u>எதிர் வழக்குரையின் சுருக்கம்:-</u>**

மனு பொய்யானதும், மோசடியானதும், சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. வழக்கு சொத்து மற்றும் இதர சொத்துக்கள் 1-ம் மனுதாரரின் மாமனாரான மாரியப்பபிள்ளைக்கு கடந்த 02.02.1979 தேதியிட்ட கிரய ஆவணப்படி பாத்தியப்பட்ட தனி சொத்தாகும். மாரியப்பபிள்ளைக்கு 3 மகன்கள் மற்றும் 4 மகள்கள் என மொத்தம் 7 பேர் வாரிசுகள் ஆவர். மாரியப்பபிள்ளை தன் ஆயுட்காலம் வரை எந்த உயிலும் எழுதிவைக்கவில்லை. மனுதாரர்கள் குறிப்பிடும் உயில் போலியாக உருவாக்கப்பட்டதாகும். உயிலில் மாரியப்பபிள்ளையின் மூன்று மகன்களும், அவர்களது வாரிசுகளும் இருக்கும் நிலையில், ஒரே மகனின் வாரிசுகளான, மனுதாரர்களுக்கு உயில் எழுதப்பட்டிருப்பது வெளிப்படையாகவே சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

**3.2)** வழக்கு சொத்து மற்றும் இதர சொத்துக்களை அடையும் நபர்கள் வம்ச பரம்பரையாக அனுபவிக்க வேண்டுமே தவிர, வேறு யாருக்கும், எப்போதும் விற்பனை செய்யவோ, குத்தகைக்கு விடவோ கூடாது என எழுதப்பட்டிருப்பது இந்திய வாரிசு உரிமைச்சட்டம் பிரிவு 114-ன்படியான வகையங்களுக்கு எதிரான சரத்தாகும். இது சொத்துக்களின் பரிமாற்றத்தை முடிவில்லாத வழியில் தடுப்பதால் அதன் அடிப்படையில் உயில் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மேலும், உயிலில் மாரியப்பபிள்ளையின் கையெழுத்துக்கு பதில் கைரேகை இடப்பட்டுள்ளது. மாரியப்பபிள்ளை கையெழுத்து போடக்கூடிய நபர் ஆவார். அவர்

இறக்கும் வரை நல்ல தெளிவுடன், நல்ல கண்பார்வையுடன், நல்ல மனநிலையிலும் இருந்தார். எனவே, அவர் கை ரேகை வைக்க வேண்டிய அவசியம் இல்லை. மாரியப்பபிள்ளையின் இறப்பிற்கு பின் அவரது மனைவி, மகன்கள் மற்றும் திருமணமாகாத மகள் ஆகியோர் கூட்டு குடும்ப சுவாதீனத்தில்தான் இருந்து வருகின்றனர்.

**3.3)** கூட்டுக்குடும்ப சுவாதீனத்தை எதிர்மனுதாரர் ஒரு போதும் இடைஞ்சல் செய்தது இல்லை. வழக்கு சொத்து மற்றும் இதர சொத்துக்களில் உள்ள 3 வீடுகளில் ஒரு வீட்டில் எதிர்மனுதாரர் வசித்து வருகிறார். இந்நிலையில் கடந்த 18.12.2024 அன்று வழக்கு மற்றும் இதர சொத்துக்களில் எதிர்மனுதாரர் விவசாயம் செய்து தென்னை மரங்களிலிருந்து தேங்காய்களை பறித்து சேகரித்துக்கொண்டிருந்தபோது அங்கு வந்த 2–ம் மனுதாரர் எதிர்மனுதாரரை தகாத வார்த்தையால் திட்டி, கொலை மிரட்டல் விடுத்து, செல்போனை பிடுங்கி, கீழே தள்ளி காயத்தை ஏற்படுத்தினார். எனவே, எதிர்மனுதாரர் காவல் துறையில் புகார் அளித்து, காவல் துறையினரால் புகார் மனு ஏற்புச்சான்று வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் வழக்கு மற்றும் இதர சொத்துக்களில் கூட்டு சுவாதீனத்தில் இருந்துவருவதால், வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை. எனவே மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

**4)** இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**5)** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**6)** **<u>பிரச்சினை</u>** :

மனு மற்றும் எதிருரையில் கண்டுள்ள சங்கதிகள், தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் இருதரப்பில் எடுத்துரைக்கப்பட்ட வாய்மொழி வாதங்களை இந்நீதிமன்றம் தீர பரிசீலனை செய்தது. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் **ம.சா.ஆ.1** முதல் **ம.சா.ஆ.16** வரையிலான

ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் **எ.ம.சா.ஆ.1** முதல் **எ.ம.சா.ஆ.12** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**6.2)** மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் ஆவர். 1–ம் மனுதாரரின் கணவர் முத்துச்சாமியும், எதிர்மனுதாரரின் கணவர் தங்கவேல் (எ) ராமலிங்கம் ஆகிய இருவரும் சகோதரர்கள் என்றும், வழக்குச்சொத்து மற்றும் இதர சொத்துக்ள் 02.02.1979 தேதியிட்ட கிரயப்பத்திரப்படி 1–ம் மனுதாரரின் மாமனார் காலம் சென்ற மாரியப்பபிள்ளைக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், அந்த சொத்துக்களை பொறுத்து மாரியப்பபிள்ளை ஒரு பதிவு செய்த உயில் எழுதிவைத்துள்ளதாகவும், மாரியப்பபிள்ளை இறந்த பிறகு உயில் அமலுக்கு வந்து உயிலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏ அட்டவணை சொத்தை வாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றும், ஏ அட்டவணை சொத்து இரண்டாக பிரிக்கப்பட்டு, இரண்டாவது பாக சொத்து இரண்டு வருட கெடுவிற்குள் மனுதாரர்கள் எதிர்மனுதாரரின் கணவரின் வாரிசுகளான மனைவி சரஸ்வதி மற்றும் நான்கு பெண்மக்களுக்கு தலா ரூ.40,000/–ஐ (மொத்தம் ரூ.2,00,000/–) செலுத்தவேண்டும் என்றும், தவறும் பட்சம் 2–வது பாக சொத்துக்களை மனுதாரர்கள் எதிர்மனுதாரர் மற்றும் அவரது பெண் மக்கள் வசம் ஒப்படைக்கும்படி உயில் எழுதப்பட்டுள்ளது என்றும், எதிர்மனுதாரர் மற்றும் அவரது பெண் வாரிசுகளிடம் உயில் சரத்துப்படி தொகையை பெற்றுக்கொண்டு ரசீது எழுதி தருமாறு பலமுறை விருப்பம் தெரிவித்தும், தொகையை பெற பதில் தெரிவிக்காமல் தற்போது வழக்கு சொத்தில் தனக்கு பாகம் உள்ளது என எதிர்மனுதாரர் கூறி மனுதாரர்களின் சுவாதீனத்திற்கு இடையூறு செய்து வருகிறார் என்றும், எனவே, மனுதாரர்கள்/வாதிகளால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.3)** வழக்கு சொத்து மற்றும் இதர சொத்துக்கள் 1–ம் மனுதாரரின் மாமனாரான மாரியப்பபிள்ளைக்கு கிரய ஆவணப்படி பாத்தியப்பட்ட தனி சொத்து என்றும், மாரியப்பபிள்ளைக்கு 3 மகன்கள் மற்றும் 4 மகள்கள் என மொத்தம் 7 பேர் வாரிசுகள் என்றும், மாரியப்பபிள்ளை தன் ஆயுட்காலம் வரை எந்த உயிலும் எழுதிவைக்கவில்லை என்றும், மனுதாரர்கள் குறிப்பிடும் உயில் போலியாக உருவாக்கப்பட்ட உயில் என்றும், மாரியப்பபிள்ளையின் மூன்று மகன்களும், அவர்களது வாரிசுகளும் இருக்கும் நிலையில் உயிலானது ஒரே மகனின் வாரிசுகளான மனுதாரர்களுக்கு எழுதப்பட்டிருப்பது வெளிப்படையாகவே சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என்றும், உயில் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், உயிலில் மாரியப்பபிள்ளையின் கையெழுத்துக்கு பதில் கைரேகை இடப்பட்டுள்ளது. மாரியப்பபிள்ளையின் இறப்பிற்கு பின் அவரது மனைவி, மகன்கள் மற்றும் திருமணமாகாத மகள் ஆகியோர் கூட்டு குடும்ப சுவாதீனத்தில்தான் இருந்து வருவதால் வழக்கிற்கு மூலம் இல்லை என்றும், எனவே மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் எதிருரை வைக்கப்பட்டுள்ளது.

**6.4)** வழக்கு சொத்து மாரியப்பபிள்ளைக்கு பாத்தியப்பட்டது என்ற சங்கதி இரு தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மாரியப்பபிள்ளை பெயரிலான வழக்கு சொத்து குறித்த கிரய ஆவணம் மா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்து காலம் சென்ற மாரியப்பபிள்ளை எழுதிவைத்த உயில் ஆவணப்படி தங்களுக்கு பாத்தியப்பட்டது என்பது மனுதாரர் தரப்பு வழக்காகும். மாரியப்பபிள்ளை எழுதிவைத்ததாக சொல்லும் உயிலின் சான்றிட்ட நகல் மா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட உயில் ஆவணத்தின் நிறைவேற்றத்தை எதிர்மனுதாரர் திட்டவட்டமாக மறுத்துள்ளார். இந்திய வாரிசுரிமைச்சட்டம் பிரிவு 63(c)–யின்படி உயில் ஆவணத்தை நிரூபிக்க வேண்டிய சுமை மனுதாரர்களை சார்ந்தது. மா.சா.ஆ.2 உயில் ஆவணம்

உண்மையானதா என்பது குறித்து விசாரணைக்கு பிறகே முடிவு செய்ய இயலும்.

**6.5)** மா.சா.ஆ.2 உயில் ஆவணமின்றி பார்க்கையில், மாரியப்பபிள்ளையின் வாரிசு என்ற வகையில், வழக்கு சொத்தில் எதிர்மனுதாரரின் கணவர் தங்கவேல் (எ) ராமலிங்கத்திற்கும் உரிமை உள்ளது. எதிர்மனுதாரரின் கணவர் இறந்துவிட்டார். அவருக்கு எதிர்மனுதாரர் மட்டும் இன்றி அவரது நான்கு மகள்களும் வாரிசுகள் என்று மனுதாரரே மனுவில் கூறியுள்ளார். மேலும், மா.சா.ஆ.2 உயில்படி மாரியப்பபிள்ளை மற்றும் அவரது மனைவியின் இறப்பிற்கு பிறகு எதிர்மனுதாரர் மற்றும் அவரது நான்கு பெண்மக்களுக்கு ரூ.40,000/– வீதம் ரூ.2 லட்சத்தை, இரண்டு வருட காலத்திற்குள் மனுதாரர்கள் செலுத்தவேண்டும் என்பது மனுதாரர்கள் தரப்பு வழக்காகும். ஆனால், எதிர்மனுதாரரின் நான்கு பெண்மக்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக மனுதாரர்கள் சேர்க்கவில்லை.

**6.6)** வழக்கு சொத்து சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு, மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு, புகார் மனு ஏற்புச்சான்றுகள் (ம.சா.ஆ.12 மற்றும் எ.ம.சா.ஆ.12) அளிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. வழக்கு சொத்தில் உள்ள வீட்டில், தான் வசித்து வந்து, மனுதாரர்களுடன் கூட்டு சுவாதீனத்தில் உள்ளதாக எதிர்மனுதாரர் எதிர்வாதம் வைத்துள்ளார். எ.ம.சா.ஆ.6 வாக்காளர் அடையாள அட்டையை பரிசீலனை செய்கையில், தோட்டத்துச்சாளையில் எதிமனுதாரர் வசிப்பதாக முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர்களும் மனு சொத்தில் களத்துச்சாளை உள்ளதாக மனுவில் குறிப்பிட்டுள்ளனர். ஆகவே, மேற்கண்டவாறான பரிசீலனையிலிருந்து வழக்கு சொத்து மனுதாரர்களுக்கு மட்டும் பாத்தியப்பட்டு, அவர்களது தனிப்பட்ட சுவாதீனத்தில் இருந்து வருகிறது என்ற முதல் நோக்கு வழக்கு மனுதாரர்கள் சார்பாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இவ்வாணையுரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ஆம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

N BHARATHIRAJAN

Digitally signed by N BHARATHIRAJAN
Date: 2025.03.24 19:26:10 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி :</u>**

–இல்லை–

**<u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் :</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 02.02.1979 | கிரயப்பத்திரம் – சான்று நகல். |
| ம.சா.ஆ.2 | 31.07.2000 | உயில் சாசனம் – சான்று நகல். |
| ம.சா.ஆ.3 | 17.06.2001 | மாரியப்பபிள்ளையின் இறப்புச்சான்று – நகல் |
| ம.சா.ஆ.4 | 19.11.2023 | அலமேலம்மாளின் இறப்புச்சான்று – நகல் |
| ம.சா.ஆ.5 | 13.10.2013 | 1–ம் வாதியின் கணவர் முத்துச்சாமியின் இறப்புச்சான்று – நகல் |
| ம.சா.ஆ.6 | 18.02.2014 | 1–ம் வாதியின் கணவர் முத்துச்சாமியின் வாரிசுச்சான்று – நகல் |
| ம.சா.ஆ.7 | 22.05.2024 | சிட்டா – ஆன்லைன் நகல். |
| ம.சா.ஆ.8 | 30.05.2024 | அடங்கல் – சான்று நகல். |
| ம.சா.ஆ.9 | 30.05.2024 | வழக்கு சொத்தின் உரிமைச்சான்று – அசல் |
| ம.சா.ஆ.10 | 01.01.1975 முதல் 25.04.2024 | வழக்கு சொத்தின் வில்லங்கச்சான்று – ஆன்லைன் நகல். |
| ம.சா.ஆ.11 | 01.01.2018 முதல் 31.05.2024 | வழக்கு சொத்தின் வில்லங்கச்சான்று – ஆன்லைன் நகல். |
| ம.சா.ஆ.12 | 31.05.2024 | பிரதிவாதிக்கு எதிராக கோட்டூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் ரசீது – நகல். |
| ம.சா.ஆ.13 | – | 1–ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை – நகல் |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.14 | – | 2–ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை – நகல் |
| ம.சா.ஆ.15 | – | 3–ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை – நகல் |
| ம.சா.ஆ.16 | – | 4–ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை – நகல் |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி :**

–இல்லை–

**எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் :**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 31.07.2001 | வாரிசுரிமைச்சான்று – நகல் |
| எ.ம.சா.ஆ.2 | 28.01.1998 | தங்கவேல் இறப்புச்சான்று – நகல் |
| எ.ம.சா.ஆ.3 | 18.05.1998 | தங்கவேல் வாரிசுச்சான்று – நகல். |
| எ.ம.சா.ஆ.4 | – | ஆதார் அடையாள அட்டை – நகல் |
| எ.ம.சா.ஆ.5 | – | குடும்ப அட்டை – நகல் |
| எ.ம.சா.ஆ.6 | – | தேர்தல் அடையாள அட்டை – நகல் |
| எ.ம.சா.ஆ.7 | – | உழவர் பாதுகாப்பு திட்ட அடையாள அட்டை – நகல் |
| எ.ம.சா.ஆ.8 | – | தனி நபர் வேலைக்கான இலவச அட்டை – நகல் |
| எ.ம.சா.ஆ.9 | 26.07.2023 | கலைஞர் மகளிர் உரிமை திட்ட விண்ணப்ப பதிவு – நகல். |
| எ.ம.சா.ஆ.10 | – | எரிவாயு விநியோக அட்டை – நகல் |
| எ.ம.சா.ஆ.11 | – | எரிவாயு பெற்றதற்கான ரசீது – அசல். |
| எ.ம.சா.ஆ.12 | 20.12.2024 | புகார் ஏற்பு ரசீது – நகல் |

N BHARATHIRAJAN

Digitally signed by N BHARATHIRAJAN
Date: 2025.03.24 19:26:21 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

---

**அசல் / வரைவு ஆணையுரை**
இ.ம. எண் 01/2024 இன் ஓ.எஸ்.117/2024
நாள் : 24.03.2025
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.

---